**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.256/2023** **தேதி.04.04.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 04.04.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | சரஸ்வதி |
| க/பெ. | : | தங்கராஜ் |
| வயது | : | 39/2025 |
| தொழில் | : | இல்லத்தரசி |
| இனம் | : | பெண் |
| கிராமம் | : | ஆயிலம் |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். பிரதிவாதி என்னிடம் **18.12.2018** அன்று **ரூ.50,000/–** கடனாக பெற்றுக் கொண்டு தாவா கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தார் அதன் அசல் ஆவணம் **வா.த.சா.ஆ.1** ஆகும். பிரதிவாதி மேற்படி தொகையை திருப்பி செலுத்தாதால் நான் எனது வழக்கறிஞர் மூலம் **26.04.2023** அன்று ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பினேன் அதன் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.2** ஆகும். அதனை பிரதிவாதி **27.04.2023** அன்று பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.த.சா.ஆ.3** ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.